Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.102 /2022  Date:20.05.2026
Deposition of witness for prosecution: PW7 ( LW 11)
Defence:
Court:

| Name | திருமதி. மங்கையர்திலகம் | Village | மதுரை தெப்பக்குளம் |
|---|---|---|---|
| Husband Name | முருகன் | Taluk | மதுரை |
| Age | 50 /26 | Calling | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 20.05.2026 TIME 04.10 **PM**

1-வது எதிரி ஆஜர். 2 முதல் 8 எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது மதுரை தெப்பக்குளம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.02.2021-ம் தேதி உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த தலைமை காவலர் திருமதி.சுமதி அவர்கள் நிலையத்தில் ஆஜராகி நஷிரீன் பாத்திமா என்பவர் அளித்த புகாரினை பெற்று குற்ற எண் 01/21 இதச பிரிவு 498(A), 406 IPC மற்றும் 4, 6 DP Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அச்சமயத்தில் ஆய்வாளராக இருந்த மரியபாக்கியம் அவர்களது பார்வைக்கு சமர்ப்பித்தார். சாட்சிகள் நஷிரீன் பாத்திமா, அஜ்மல்கான், ராபீயா பேகம், முகமது அசாருதின், ஆகியோர்களை விசாரணை செய்து, ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தார். மேலும் சம்பவ இடம் பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் சாட்சிகள் சையது அபுதாகீர், பசீர் அகமது ஆகியோர் முன்னிலையில் தயார்செய்து, அந்த சாட்சிகை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் நான் இந்த வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்கு எடுத்து, சாட்சிகள் ஷிமலா தேவி, பாலமுருகன், சுமதி ஆகியோர்களை விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையின் முடிவில் எதிரிகள் அ.சா.1 ஐ உடலாலும், மனதாலும் வன்கொடுமை செய்ததாகவும், நம்பிக்கை மோசடி செய்ததாக மட்டுமே தெரியவந்ததால் வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவு 498(A), 406 IPC மற்றும் 4, 6 DP Act ன் கீழ் இருந்து இதச பிரிவு 498(A), 494, 506(i) IPC கீழ் மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து அறிக்கை சமர்ப்பித்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் முன்பிணை பெற்றதால் கைது செய்யவில்லை. அகமது ஜையான் என்பவரின் பிறப்பு சான்றிதழ் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) 3 புகார்களை காவல் நிலையத்தில் அ.சா.1 அளித்ததாக குறிப்பிட்டது

பற்றி எனது குற்ற இறுதியறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. 1–வது எதிரி, அ.சா.1க்கு கொலை மிரட்டல் விடுத்ததாக புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. 1–வது எதிரியும், அ.சா.1–ம் சட்டப்படி விவாகரத்து பெற்றார்களா அல்லது இல்லையா என்பதை குறித்து எனது குற்ற இறுதியறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. 1–வது எதிரி, 2 வது முறை திருமணம் செய்து கொண்டதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முகமது ஜமீர் என வேறு நபர்கள் இருக்க வாய்ப்பு உள்ளது என்றால் முகவரியிலும், பிறப்பு சான்றிதழிலும் குறிப்பிட்டுள்ளது.

2) என்னிடம் காட்டப்படும் ஆவணம் சமூல நல அலுவலரால் புகார்தாரர் விசாரிக்கப்பட்டதற்கு சம்மந்தமான ஆவணம் என்றால் சரிதான். அது **எ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதசா.ஆ.1 குடும்ப வன்முறையோ, அல்லது வரதட்சணை கொடுமையோ இல்லை என்றும், சிறிய கருத்துவேறுபாடு மட்டுமே உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் வழக்கினை சரிவர புலன் விசாரணை செய்யாமல் தவறுதலான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.